நடத்தப்பட வேண்டுமாதலால் மேற்படி தேர்வு நடத்துவதினால் உண்டாகும் வேலைப்பளு, தேர்வு எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை இவைகளைப் பார்க்கின் தேர்வு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் மிகவும் குறைந்தனவாகவே கருதப்பட வேண்டும். மேலும் 1972 ஆம் ஆண்டு மே திங்களில் நடந்த தேர்வுக்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்களை விட 1973-ம் ஆண்டு மே திங்களில் நடத்தப்பட்ட தேர்விற்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் மிகவும் குறைவு.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் கல்விக்கென்று தனி இயக்குநர், தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உரிய நேரத்தில் தேர்வைத் தொடங்கவும், உரிய நேரத்தில் தேர்வு முடிவை அறிவிக்கவும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு எவ்வளவு விரைவு படுத்த இயலுமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. 1972-ம் ஆண்டு மே திங்களில் நடந்த தேர்வுக்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் 3 திங்கள் 2 நாட்கள் ஆகும். 1973-ம் ஆண்டு மே திங்களில் நடந்த தேர்வுக்கு முடிவுகள் அறிவிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் 2 திங்கள் 23 நாட்கள் ஆகும். இன்னும் எவ்வளவு குறைக்க இயலுமோ அவ்வளவு குறைக்கும் முயற்சியினை இந்தத் துறை மேற்கொள்ளும்.

*123 வினா—**திரு. நா. வீராசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973-ம் ஆண்டு, மே திங்களில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் தேர்வுகளில் கலந்து கொண்ட மாணவர் களின் எண்ணிக்கை பாடவாரியாக எவ்வளவு?

(இ) அவர்களில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை பாடவாரியாக எவ்வளவு?

1974 சனவரி 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) விவர அறிக்கையொன்று@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சியிலே கலந்துகொள்வதற்கான குறைந்தபட்சத் தகுதி என்ன நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, லோயர் கிரேடு, ஹையர் கிரேடு என்று பல்வேறு தன்மைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. தனியார்த் துறையில் இருக்கும் பல்வேறு நிறுவனங்கள் இந்தப் பயிற்சியை அளிக்கின்றன. இந்தத் தேர்வுகளை நடத்தும் பொறுப்பை மட்டும் தொழில் நுட்ப இயக்குநர் அகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. பயிற்சி பெறுகிறவர்களுக்கு என்ன என்ன தகுதிகள் என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

Research on works of Avvaiyar

* 124 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to institute any research project into the works of Avvaiyar in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS : Sir, may I know whether all the writings of Avvaiyar have been collected?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றி ஆராய்ச்சி முடிப்பதற்கு நாம் தனி குழு ஒன்றும் அமைக்கவில்லை. ஆனால் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு இருக்கும் மாணவர்கள் இப்படிப்பட்ட தலைப்புகளை எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

@ 136–137-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.